# முரண்பாட்டிற்க்குப் பின்னரான சமூக ஒருங்கிசைவில் மீள்கட்டுமான செயற்றிட்டங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் - சிவில் சமூக நிலைப்பாட்டை ஊடறுத்த சமூக மானிடவியல் பார்வை

குணநாயகம் விக்னேஸ்வரன்
சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
carlosvicka@yahoo.com

***ஆய்வுச் சுருக்கம்***

*மீள் கட்டுமான செயற்றிட்ட தலையீடுகள் சமூகத்தில் ஒருங்கிசைவு, முரண்பாட்டுச் சூழ்நிலை என்பன தொடர்பில் கவனத்தையீர்க்கின்றன. மீள்கட்டுமான செயற்றிட்டங்கள் சமுதாய தேவைப் பூர்த்தியுடன் தொடர்புபட்ட வகையில் முரண்பாட்டு தடுப்புக் காரணிகளாக அமையும். அவ்வாறல்லாவிடின் சமுதாயத்தில் ஏற்கனவே காணப்படும் முரண்பாடுகளின் தன்மையினை தீவிரமாக்கும் அல்லது புதிய முரண்பாட்டுக்கான காரணிகளாக அமையும். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள்கட்டுமானம் தொடர்பில் கவனம் செலுத்தத்தக்கவை. ஏனெனில் இயற்கை அனர்த்தங்கள், மற்றும் போர் என்பவற்றின் பின்னரான பெருமளவிலான செயற்றிட்டங்கள் மீள்கட்டுமானம் தொடர்பில் இங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளன. இன, மத, சாதி ரீதியிலான பல்லினத்தன்மை கொண்ட சமுதாயங்களிலும் மீள்கட்டுமான செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டுரையானது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் மக்களது அபிப்பிராயங்களை மையப்படுத்தி, இச்செயற்றிட்ட அமுலாக்கங்கள் சமூக ஒழுங்கில் ஏற்படுத்திய தாக்கத்தினை மதிப்பிடுவதாக அமைகின்றது. மீளமைப்புச் செயற்றிட்ட நடைமுறைகளில் பொதுவாகக் காணப்பட்ட குறைபாடாக கருதப்படுவது பயனாளிகளைத் தெரிவு செய்வதில் காட்டப்பட்ட பாரபட்சமாகும். அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு, தேவையுடைய குடும்பங்கள் பல, அவர்களது தேவைகளை மையப்படுத்தி, அவர்களது சமுதாயத்தில் மேற்கொள்ளப்பட்ட மீளமைப்பு திட்டங்களில் பயனடைவதில் இருந்து புறந்தள்ளப்பட்டுள்ளனர். பொதுவளப் பகிர்வு, விநியோகம் என்பவற்றுடன் தொடர்புபட்ட மீள்கட்டுமானத் திட்டங்கள் சமூகத்தில் ஏற்கனவே புறந்தள்ளப்பட்டு, பொதுவளங்களைப் பெறுவதில் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு பயனளித்தவையாகவும் காணப்படுகின்றன. குறிப்பாக சில தமிழ் கிராமிய சமுதாயங்களில் சாதிரீதியாக ஓரங்கட்டல்களால் ஒடுக்கப்பட்ட சாதிக்குழுக்கள் பொதுவான வளங்களை அனுபவிப்பதில் இருந்து தடுக்கப்பட்டிருந்தன. பிரதானமாக நீர்வளம் சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்வதில் ஒடுக்கப்பட்ட மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கினர்.குறிப்பிட்ட சமுதாய மக்களின் ஆலோசனைகள், கருத்துக்கள் உள்ளீர்க்கப்படுவது இன்றியமையாததாகும். ஆனால் பெருமளவிலான உட்கட்டுமான மீளமைப்பு செயற்றிட்டங்களில் மக்களது கருத்துக்கள் கேட்டறியப்படவில்லை. இதனால் மக்களது உண்மையான தேவைகளை பூர்த்தி செய்யத்தக்க வகையில் அதிகமான கட்டுமானங்கள் அமையவிலலை. வீடமைப்புத் திட்டங்கள் பல மக்களது அடிப்படையான குடும்பத் தேவைகளை நிறைவு செய்வதற்கான பௌதீக வசதிகளை கொண்டிருக்கவில்லை. அத்தோடு சில சமுதாய மக்களின் கலாசாரத்திற்குப் பொருந்தாத வகையிலும் அமையப்பெற்றிருந்தன. பிராந்திய நிருவாக, அரசியல் தலைமைகளின் வழிகாட்டல்களின்*

*படியே அவை நடைமுறைப்பட்டிருந்தன. இது பல இடங்களில் முரண்பாட்டுச் சூழ்நிலைகளில் குறிப்பிடத்தக்க எதிர்நிலையான பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. அதாவது ஏற்கனவே இருந்த முரண்பாடுகளை தீவிரப்படுத்தியிருந்தது. அத்தோடு புதிய முரண்பாடுகளையும் தோற்றுவித்திருந்தது. குறிப்பாக வீடமைப்புத் திட்டங்களே இத்தகைய இழுபறி நிலையை இனக்குழுக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தன.மேலும் சமுதாய ஒழுங்கமைப்பு தொடர்பில் மரபுரீதியான கருத்தியலைவிடுத்து ஒரு நவீன அணுகுமுறையொன்றை பின்பற்றவேண்டியதன் அவசியமும் உணரப்பட்டுள்ளது. அதாவது தேவைக்கான வளங்களை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் மக்களை போராடுவதற்காக ஒன்றிணைக்கின்ற மரபுசார் சமுதாய ஒழுங்கமைப்பு அணுகுமுறையை பின்பற்றுவதானது சமுதாயத்தின் குழு அடையாளத்ததை உண்டுபண்ணத்தக்க சமூகப் பிரிவுகளின் வழியே மக்கள் ஒழுங்கமைய வழிவகை செய்யும். இது மீளமைப்புசார் அபிவிருத்திக்கு எதிரான சூழ்நிலையை தோற்றுவிக்கும். இதைவிடுத்து அபிவிருத்தி இலக்குகளை நோக்கி ஒரு குழுவாக செயற்படுவதற்கு மக்களை ஊக்குவிப்பதானது பங்குகொள் அபிவிருத்திக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும். இவ்வகை ஒழுங்கமைப்பை ஏற்படுத்துவதற்காக சிவில் சமூகத்தை பலப்படுத்தும் கைங்கரியங்களை மேற்கொள்வது அவசியமானது.*

*திறவுச் சொற்கள்: சமூக ஒருங்கிசைவு, சமுதாய மீளமைப்பு, மீள்கட்டுமானம், சிவில் சமூகம், சமுதாய ஒழுங்கமைப்பு*

## 1. அறிமுகம்

முரண்பாட்டிற்கு பின்னரான சூழ்நிலையில் சமூகங்களை மீளக் கட்டியெழுப்புவதில் மீள்குடியேற்றம் (Resettlement) நல்லிணக்கம் (Reconciliation), புனர்வாழ்வளித்தல் (Rehabilitation), மீள்கட்டுமானம் (Reconstruction) என்பன பிரபலமான செயன்முறைகளாகும். இதில் மீள்கட்டுமானம் என்பது வெளிப்படையாகவே சமூகத்தின் உட்கட்டுமானம் சார்ந்த மீள்கட்டியெழுப்புதலை குறித்து நிற்கின்றது.

சமூக ஒழுங்கு ஒன்றை பொறுத்த வரை, உட்கட்டுமானமென்பது சமூக உறுப்பினர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதை மையப்படுத்தியதாகும். இதனால் உட்கட்டுமானத்தை மீளக்கட்டியெழுப்புவதென்பது அனர்த்தத்திற்கு பின்னரான சூழ்நியையில் அவசியமானதொன்றாகின்றது. ஏனெனில் சமூக உறுப்பினர்களுக்கிடையில் உடன்பாடு சார்ந்த ஒருமைப்பாடு நிலவ வேண்டியது சமூக ஒழுங்கிற்கு அவசியமானது. அவ்வாறாயின் மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் சமூகத்தில் செயற்பாடுகள் கையாளப்பட வேண்டும். இதனடிப்படையில் அனர்த்தத்திற்கு பின்னரான சமுதாயங்களில் மீளமைப்பு பணிகளை ஆற்றுகின்ற போது அவை அம்மக்களது தேவைகளை பூர்த்தி செய்யத்தக்க வகையிலும், முரண்பாடுகளையோ அல்லது வேறு சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தாத வகையிலும் அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் சமுதாயத்தில் மீள்கட்டுமான தலையீடுகள் சமூக ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தத்தக்கவை. அதாவது சமூக உறுப்பினர்களுக்கிடையில் உடன்பாட்டின்

அடிப்படையிலான ஒருமைப்பாட்டில் இவை நிச்சயமான தாக்கத்தை செலுத்தக் கூடியவை.

மீள் கட்டுமான செயற்றிட்ட தலையீடுகள் சமூகத்தில் ஒருங்கிசைவு, முரண்பாட்டுச் சூழ்நிலை என்பன தொடர்பில் கவனத்தையீர்க்கின்றன. மீள்கட்டுமான செயற்றிட்டங்கள் சமுதாய தேவைப் பூர்த்தியுடன் தொடர்புபட்ட வகையில் முரண்பாட்டு தடுப்புக் காரணிகளாக அமையும். அவ்வாறல்லாவிடின் சமுதாயத்தில் ஏற்கனவே காணப்படும் முரண்பாடுகளின் தன்மையினை தீவிரமாக்கும் அல்லது புதிய முரண்பாட்டுக்கான காரணிகளாக அமையும். சில சந்தர்ப்பங்களில் சமூகத்தில் எந்தவித தாக்கத்தினையும் கொண்டிருக்காமலும் விடலாம்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள்கட்டுமானம் தொடர்பில் கவனம் செலுத்தத்தக்கவை. ஏனெனில் இயற்கை அனர்த்தங்கள், மற்றும் போர் என்பவற்றின் பின்னரான பெருமளவிலான செயற்றிட்டங்கள் மீள்கட்டுமானம் தொடர்பில் இங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளன. இன, மத, சாதி ரீதியிலான பல்லினத்தன்மை கொண்ட சமுதாயங்களிலும் மீள்கட்டுமான செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இச்செயற்றிட்டங்கள் அவை அமுல்படுத்தப்படுத்தப்பட்ட சமுதாயங்களின் தேவைகளை எந்தளவில் மையப்படுத்தியுள்ளன, மக்களின் தேவைப்பூர்த்தியில் எவ்வளவுக்கு பங்களிப்பு செய்துள்ளன என்பது மீள்கட்டுமானங்களின் சமூகத் தாக்கம் தொடர்பிலான ஆய்வு சார்ந்த அம்சங்களாகும்.

ஒத்துவராத வேறுபாட்டுத் தன்மைகளின் அடிப்படையில் முரண்பாடு நிலவிய சமூகங்களின் மீள்கட்டுமான செயற்றிட்டங்கள் முரண்பாடுகளை தடுக்க வழியேற்படுத்தினவா அல்லது மேலும் முரண்பாடுகளின் தீவிரத்தன்மைக்கு காரணமாகினவா என்பதும், ஏற்கனவே ஒருமைப்பாடுடைய சமுதாயத்தில் புதிய முரண்பாடு சார் விரிசல்களை உருவாக்கியுள்ளனவா என்பதும், சமூக ஒழுங்கின் மீது மீள்கட்டுமானங்கள் செலுத்துகின்ற தாக்கங்கள் தொடர்பில் ஆய்வு சார் முக்கியத்துவத்தினை பெறுகின்றன.

இக்கட்டுரையின் பிரதான நோக்கமானது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் மக்களது அபிப்பிராயங்களை மையப்படுத்தி, இச்செயற்றிட்ட அமுலாக்கங்கள் சமூக ஒழுங்கில் ஏற்படுத்திய தாக்கத்தினை மதிப்பிடுவதாக அமைகின்றது. மேலும் இக்கட்டுரையானது இவ்விரு மாகாணங்களிலும் அமுல்படுத்தப்பட்ட மீள் கட்டுமான செயற்றிட்டங்களின் சமூக தாக்கங்களை மக்களது அபிப்பிராயங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்து, அவை முரண்பாட்டுச் சூழ்நிலையில் செலுத்துகின்ற தாக்கங்களின் காரணங்களையும் கண்டறிவதை மையமாகக் கொண்டுள்ளது.

## 2. சமூக ஒழுங்கின் மீளமைப்பும் சிவில் சமூகத்தின் அவசியமும்

அனர்த்தங்களின் தாக்கங்களைப் பெற்ற சமுதாயக் கட்டமைப்புக்களின் சீர்குலைந்த சமூக ஒழுங்கினை மீளமைக்கும் செயற்றிட்டங்களின் நடைமுறைகளில் சரியான வகையிலான ஒருங்கிணைப்பு

காணப்பட வேண்டியதன் அவசியம் தற்காலத்தில் நன்குணரப்பட்ட ஒன்றாகும். ஏனெனில் சமூக ஒழுங்கு என்னும் எண்ணக்கருவானது வெறுமனே மட்டுப்பாடுகள், கட்டுப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதுமட்டுமன்றி, பரஸ்பரத்தன்மை, உடன்பாடு, நிலைபேறு என்பவற்றையும் மையமாகக் கொண்டதாகும். (Cohen, 1979: 18-19). சமூகமென்பது தனித்தனியான செயற்பாடுகளைக் கொண்ட பல்வேறு கூறுகளினை உள்ளடக்கிய ஓர் முழுமையாகும். தனிமனிதத் தேவைகளை நிவர்த்திசெய்வதான அச்செயற்பாடுகளினை ஒருங்கிணைந்த வகையில் அக்கூறுகள் ஆற்றுகின்றன. கூறுகளின் செயற்பாட்டுரீதியான ஒருங்கிணைவின் சீரான, சமநிலைத் தன்மையானது சமூக ஒழுங்கு என்பது அடிப்படையான சமூகவியற் கருத்தாகும். (Marshall, 1998: 67, Nanda, 1980: 29, Outhwhite and Bottomore, 1999: 236). இதனால் அனர்த்தத்தின் பின்னரான மீளமைப்புச் (Post-Disaster Recovery) செயற்றிட்டங்களின் வெற்றிகரமாக நிறைவேற்றுதலானது, பாதிப்புற்ற சமூகச் சூழ்நிலையின் தன்மையுடனான அச்செயற்றிட்டங்களின் இயைபிலேயே தங்கியுள்ளது. இவ்வாறானதொரு இயைபினை ஏற்படுத்துவதென்பது குறிப்பிட்ட சமூகத்தைப் பற்றிய விரிவான சமூக ஆய்வினையும் அதற்கேற்ப கால விரயத்தையும் வேண்டிநிற்பதாகும். இதன் காரணமாகவே சமூகக்கட்டமைப்பின் தன்மைக்கு முதன்மையளித்து வடிவமைப்பதை விடுத்து, பாதிக்கப்பட்ட சமூக உறுப்பினர்களின் தேவையை முன்னிலைப்படுத்தியதாக, தேவை மதிப்பீட்டினை (Need Assessment) அடிப்படையாகக்கொண்ட மீளமைப்புச் செயற்றிட்டங்களை வரையும் போக்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்நிலையில் பங்குகொள் அபிவிருத்தியின் (Participatory Development) முக்கியத்துவம் அவசியமானவகையில் உணரப்படுகின்றது. 1990களில் உருவான புதிய அபிவிருத்திக் கோட்பாடான பங்குகொள் அபிவிருத்தியானது சுதேசிய அறிவு, சமூகத்தின் கீழ்மட்டரீதியிலான திட்டமிடல் என்பவற்றின் மீதான அழுத்தங்களை கொண்டமைந்துள்ளதோடு, சிவில் சமூகத்தினது பங்குபற்றலின் அவசியத்தினையும் வலியுறுத்தி நிற்கின்றது. (Wickramasinghe, 2001:86).

சிவில் சமூகம் என்ற எண்ணக்கருவானது அரசின் கட்டுப்பாடு, உறவுமுறை, மற்றும் குடும்பத் தளைகளிற்கு அப்பாற்பட்ட நிலையில் மக்கள் சந்தித்து, ஒழுங்கமைந்து, செயற்படுவதைக் குறிக்கின்றது. மக்கள் ஒழுங்கமைவதற்கான தளமாகக் கருதப்படுகின்ற சிவில் சமூகமானது, சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான உபாயக் காரணியாகவும் கொள்ளப்படுகின்றது. (Orjuela, 2004:22). இக்கருத்தினடிப்படையில் பங்குகொள் அபிவிருத்தியை மையப்படுத்திய மீளமைப்புச் செயற்றிட்டங்களில் சிவில் சமூகத்தின் பங்குபற்றல் இன்றியமையாததாகின்றது. ஏனெனில் மக்கள் அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்றபொழுது அவர்கள் தங்களது சமுதாயத்தினை மீளமைப்பதற்கான பங்களிப்பில் ஒரு மைய விருப்பினை (Central Interest)

விருத்திசெய்கின்றனர். அனர்த்தத்தின் பின்னரான மீளமைப்புக் காலப்பகுதியில் அழிவுகளின் தன்மையானது மீளமைப்புச் செயன்முறைகளில் சிவில் சமூகத்தின் பங்குபற்றலுக்கான அவசியத்தையளிக்கின்றன. ஒரு நலிவுற்ற நிறுவனச் சூழலில் சிவில் சமூகமானது சமூக இடைவினைகளுக்கு வசதிசெய்வதற்கான காரணியாக செயற்படத்தக்கதாக உள்ளது. (Jeong, 2006:120). மீளமைப்பு நடவடிக்கைகளை நோக்கியதான சமுதாய உறுப்பினர்களின் உளப்பாங்குகளை ஒன்றிணைக்கக் கூடியதான சிவில் சமூகமானது மீளமைப்பு செயல்பாடுகளினை நெறிப்படுத்துபவர்களுக்கு அவர்களது செயன்முறைகளின் சரியான அமுல்படுத்தல்களுக்கு முக்கியமானதாகும். ஏனெனில் நிதியன்பளிப்பாளர்களும் செயற்றிட்ட அமுலாக்குனர்களும் பெரும்பாலும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சமுதாயத்திற்கு வெளிவாரியானவர்களாவர். இதனாலேயே நிதியன்பளிப்பு நிறுவனங்கள் மீளமைப்புச் செயன்முறை நடைமுறைப்படுத்தப்படும் பகுதியில் சிவில் சமூகத்தை மீளக்கட்டமைக்கும் கொள்கையை அதிகமாக கடைப்பிடிக்கின்றன. (Borgh, 2006). இது அவர்களது செயற்றிட்டங்களின் இலக்குகள் உரிய முறையில் பயனாளிகளை சென்றடைவதற்கு வகைசெய்கின்றது. இதனால் பங்குகொள் அபிவிருத்தியை மையப்படுத்திய மீளமைப்புச் செயற்றிட்டங்களில் சிவில் சமூகத்தின் பங்குபற்றலானது அவசியமானதாக உள்ளது.


**3. அபிவிருத்தித் தலையீடுகளின் காரணத்துவரீதியான தன்மை**

பங்குகொள் அபிவிருத்தியை மையப்படுத்திய மீளமைப்புச் செயற்றிட்டங்களில் சிவில் சமூகத்தின் பங்குபற்றல் இன்றியமையாததாகின்றது. ஏனெனில் மக்கள் அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்றபொழுது அவர்கள் தங்களது சமுதாயத்தினை மீளமைப்பதற்கான பங்களிப்பில் ஒரு மைய விருப்பினை (Central Interest) விருத்திசெய்கின்றனர். (Constatino-David, 1997). அனர்த்தத்தின் பின்னரான மீளமைப்புக் காலப்பகுதியில் அழிவுகளின் தன்மையானது மீளமைப்புச் செயன்முறைகளில் சிவில் சமூகத்தின் பங்குபற்றலுக்கான அவசியத்தையளிக்கின்றன. ஒரு நலிவுற்ற நிறுவனச் சூழலில் சிவில் சமூகமானது சமூக இடைவினைகளுக்கு வசதிசெய்வதற்கான காரணியாக செயற்படத்தக்கதாக உள்ளது. மீளமைப்பு நடவடிக்கைகளை நோக்கியதான சமுதாய உறுப்பினர்களின் உளப்பாங்குகளை ஒன்றிணைக்கக் கூடியதான சிவில் சமூகமானது மீளமைப்பு செயல்பாடுகளினை நெறிப்படுத்துபவர்களுக்கு அவர்களது செயன்முறைகளின் சரியான அமுல்படுத்தல்களுக்கு முக்கியமானதாகும். ஏனெனில் நிதியன்பளிப்பாளர்களும் செயற்றிட்ட அமுலாக்குனர்களும் பெரும்பாலும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சமுதாயத்திற்கு வெளிவாரியானவர்களாவர். இதனாலேயே நிதியன்பளிப்பு நிறுவனங்கள் மீளமைப்புச் செயன்முறை நடைமுறைப்படுத்தப்படும் பகுதியில் சிவில் சமூகத்தை

மீளக்கட்டமைக்கும் கொள்கையை அதிகமாக கடைப்பிடிக்கின்றன. பங்குகொள் அபிவிருத்தியை மையப்படுத்திய மீளமைப்புச் செயற்றிட்டங்களில் சிவில் சமூகத்தின் பங்குபற்றலை பெற முடியாதவிடத்து, அமுல்படுத்துனர்கள் நடைமுறையில் சிக்கல் நிலைமைகளினை எதிர்கொள்ள வேண்டியேற்படுகிறது.

உதவியளிக்கும் நிறுவனங்களும், கட்டுமான முகவர்களும் மக்களது தேவைகளை கருத்தில் எடுக்கத் தவறுகின்றனர். இதனால் மீள்கட்டுமான வேலைகள் மக்களது தேவைகளை நிவர்த்தி செய்யத் தவறுகின்றன. மீள் கட்டுமான செயன்முறைகளோடு தொடர்புபட்ட பெருமளவான பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக ஓரங்கட்டல்கள், புறந்தள்ளப்படுதல் போன்ற சமூக விவகாரங்கள் வெளிப்டையாகக் காணப்படும் கட்டுமான செயற்றிட்டங்கள் சமூகப் பிரச்சினைகளின் காரணிகளாக அமைகின்றன. (Leahy, 1986).

இலங்கையின் வடக்கு. கிழக்கு மாகாணங்கள் முரண்பாட்டிற்கு பின்னரான சமூக சூழ்நிலைகளின் பொருத்தமான எடுத்துக் காட்டிற்குரிய பிரதேசங்களாகும். இங்கே பெருமளவிலான கட்டுமான செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றன. ஆனால் இங்கே மீள் கட்டுமான செயற்பாட்டின் யதார்த்தமான இலக்கினை அடைவதென்பது சவால்கள் நிறைந்ததாக காணப்படுகின்றது. இவ்விரண்டு மாகாணங்களும் மக்கள் மத்தியில் விருப்புக்களின் பல்வகைத்தன்மையை பிரதிபலிக்கும் பிரதேசங்களாகும். இந்த விருப்புக்களின் பிளவுற்ற தன்மையானது சமுதாய அடிப்படையில் முரண்பாடுகள் ஏற்படக் காரணமாக உள்ளது. மேலும் இவ்விரு மாகாணங்களும் தனித்துவமான கலாசார வடிவங்களை உள்ளடக்கியவை. கட்டுமான செயற்றிட்டங்கள், இத்தகைய மக்களின் வேறுபட்ட விருப்புக்களையும் சமூகங்களின் கலாசார, சமுதாய கட்டமைப்புக்களையும் பற்றிய சிறந்த புரிந்துணர்வை உருவாக்கத் தவறும் பட்சத்தில், இச்செயற்றிட்ட முன்னெடுப்புக்கள் மக்களது பார்வையில் திருப்தியற்றதாகவே காணப்படும். இதனால் நிச்சயமான ஒரு அளவிற்கு அத்திட்டங்கள் சமூகப்பிரச்சினைகளை உருவாக்கவோ அல்லது மோசமாக ஆக்குவதற்கோ அமையும்.



## 4. மீள்கட்டுமான திட்டங்கள் தொடர்பான சிவில் சமூகத்தின் பொது உள்நோக்குகள்.

### i) பயனாளிகள் தெரிவில் பாரபட்சங்கள்

மீளமைப்புச் செயற்றிட்ட நடைமுறைகளில் பொதுவாகக் காணப்பட்ட குறைபாடாக கருதப்படுவது பயனாளிகளைத் தெரிவு செய்வதில் காட்டப்பட்ட பாரபட்சமாகும். அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு, தேவையுடைய குடும்பங்கள் பல, அவர்களது தேவைகளை மையப்படுத்தி, அவர்களது சமுதாயத்தில் மேற்கொள்ளப்பட்ட மீளமைப்பு திட்டங்களில் பயனடைவதில் இருந்து புறந்தள்ளப்பட்டுள்ளனர். இது பெரும்பாலும் தற்செயலானதாகவன்றி வேண்டுமென்றே நிகழ்த்தப்பட்டதாக தோன்றுகின்றது. திட்ட அமுலாக்கல் தரப்பினர் மத்தியில் காணப்பட்ட ஊழல்சார்ந்த போக்குகள், சுரண்டல்சார் நடைமுறைகள் என்பன பயனாளிகள் தெரிவில் ஓரங்கட்டல்கள் இடம்பெற காரணமாயிற்று. திட்டங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அரசநிருவாக கட்மைப்புச் சார்ந்தவர்கள் இது தொடர்பில் அதிக விமர்சனத்துக்குரியவர்களாக கணிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு உள்ளூர் அரசியல்ரீதியான தலையீடுகளும் திட்டங்களின் பயனாளிகள் தெரிவில் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைச் செலுத்தியுள்ளன. இதனால் மீள்கட்டுமானத் தேவையுடைய மக்கள் அமுல்படுத்தப்பட்ட மீள்கட்டுமானத் திட்டங்களில் இருந்து பயனடைவது தடுக்கப்பட்டதோடு, அனர்த்தப் பாதிப்பிற்குட்படாத, கட்டுமானத்தேவை அவசியமற்ற நபர்கள் பயனாளிகளயினர். குறிப்பிடத்தக்க வீடமைப்புத் திட்டங்களில் கருதத்தக்களவான வீடுகள் இதுவரை பயன்படுத்தப்படாது வெறுமையாக இருக்கின்றமை இதற்கு சான்றாக அமைகிறது. அத்தோடு மீளமைப்பு செயற்றிட்ட பிரதேசங்களில் பாதிக்கப்பட்டு இதுவரையும் நிரந்தர வீட்டுவசதி இல்லாத குடும்பங்களும், இப்பாரபட்சத்தின் எடுத்துக்காட்டுகளாகும். இதுமட்டுமன்றி பயனாளிகள் தெரிவில் சமூகரீதியாக காணப்பட்ட முற்சாய்வுகளும் பாரபட்சங்கள் காட்டப்படுவதற்கு காரணமாய் அமைந்தன. ஓரினத்தன்மையுடைய சமுகங்களில் காணப்பட்ட சமுதாய அடிப்படை முற்சாய்வுகளும், பல்லினத் தன்மை கொண்ட சமூகங்களில் காணப்பட்ட குழுசார்ந்த அடையாளத்துவ மோதல்களும் பயனாளிகள் தெரிவில் ஓரங்கட்டல்கள் இடம்பெறுவதில் தாக்கம் செலுத்தின. ஒரே இனமக்களைக் கொண்ட சமுகங்களில் காணப்பட்ட சாதி, மத, வர்க்கரீதியான வேறுபாடுகள் நலிவுற்ற மக்கள் குழுக்கள் திட்டங்களில் பயனடைவதைத் தடுத்திருந்தன. இது போலவே பல்லின சமுகங்களில் பெரும்பான்மை அல்லது அரசியல் அதிகார பின்புலம் கொண்ட சமூகக்குழுக்கள் திட்டங்களின் பயனைச் சுவிகரித்துக் கொண்டன. இத்தகைய போக்குகள் பாதிக்கப்பட்ட மக்கள் திட்டங்களினூடாக பயன்பெறுவதில் ஓரங்கட்டல்களை மாத்திரம் ஏற்படுத்தவில்லை. அவை சமுதாயத்திற்குள்ளேயான, சமுதாயங்களுக்கிடையேயான பிளவுகளை ஏற்படுத்தவும் காரணமாகவிருந்தன.

ii) **ஓரங்கட்டப்பட்ட மக்கள் குழுக்களின் தேவைப்பூர்த்தி**

பொதுவளப் பகிர்வு, விநியோகம் என்பவற்றுடன் தொடர்புபட்ட மீள்கட்டுமானத் திட்டங்கள் சமுகத்தில் ஏற்கனவே புறந்தள்ளப்பட்டு, பொதுவளங்களைப் பெறுவதில் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு பயனளித்தவையாகவும் காணப்படுகின்றன. குறிப்பாக சில தமிழ் கிராமிய சமுதாயங்களில் சாதிரீதியாக ஓரங்கட்டல்களால் ஓடுக்கப்பட்ட சாதிக்குழுக்கள் பொதுவான வளங்களை அனுபவிப்பதில் இருந்து தடுக்கப்பட்டிருந்தன. பிரதானமாக நீர்வளம் சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்வதில் ஒடுக்கப்பட்ட மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கினர். பொதுக்கிணறுகள் அல்லது நீர்நிலைகளில் நீரைப் பெற்றுக் கொள்வதில் இம்மக்களுக்கு மட்டுப்பாடுகள் இடப்பட்டிருந்தது. இது அச்சமுதாயங்களில் ஏற்றத்தாழ்வுடைய குழுக்களுக்கிடையில் முரண்பாட்டு நிலைக்கான அடித்தளத்தையிட்டிருந்தது. ஆனால் அப்பகுதியில் நீர் விநியோகத்தை மையப்படுத்தி அமுல்ப்படுத்தப்பட்ட கட்டுமானத்திட்டங்கள் இவ்விநியோகம் தொடர்பான முரண்பாட்டிற்கு தீர்வாக அமைந்தன. அதாவது குடிநீர் விநியோகத் திட்டங்கள் மூலமாக ஒதுக்கப்பட்ட மக்களின் வதிவிடங்களுக்கு தனியான நீர்விநியோக வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதனால் அம்மக்களின் அடிப்படைத்தேவை பூர்த்தி செய்யப்பட்டது. அத்தோடு அது தொடர்பில் காணப்பட்ட முரண்பாட்டு சூழ்நிலைகளும் இல்லாது போயின.

iii) **பௌதீக கட்டுமானங்களில் திருப்பதியற்ற தன்மை:**

உட்கட்டுமானங்களின் மீள்கட்டமைப்பு என்பது மக்களது தேவைகளின் பூர்த்திகளை மையமாக்கியதாகவே அமைந்திருக்க வேண்டும். இதற்காக கட்டுமானத் திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னதாக அதனைத் திட்டமிடும் போது குறிப்பிட்ட சமுதாய தேவைகளுடன் அவை பொருந்திச் செல்கின்றதா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். சமுதாயத்தின் உட்கட்டுமானங்கள் குடும்பங்களின் தனிநபர் சார்ந்த அடிப்படைத் தேவைகளோடு மட்மன்றி, சமுதாயத்தினதும் அதுசார்ந்த கலாசாரத்தினதும் தேவைகளோடு தொடர்புபட்டிருக்க வேண்டும். இதனால் திட்டம் அமுல்படுத்துகின்ற சமுதாயத்தினது தேவைகள் நன்குணரப்பட்டு திட்டம் வடிவமைக்கப்படுவது அவசியம். இதற்காக குறிப்பிட்ட சமுதாய மக்களின் ஆலோசனைகள், கருத்துக்கள் உள்ளீர்க்கப்படுவது இன்றியமையாததாகும். ஆனால் பெருமளவிலான உட்கட்டுமான மீளமைப்பு செயற்றிட்டங்களில் மக்களது கருத்துக்கள் கேட்டறியப்படவில்லை. இதனால் மக்களது உண்மையான தேவைகளை பூர்த்தி செய்யத்தக்க வகையில் அதிகமான கட்டுமானங்கள் அமையவிலலை. வீடமைப்புத் திட்டங்கள் பல மக்களது அடிப்படையான குடும்பத் தேவைகளை நிறைவு செய்வதற்கான பௌதீக வசதிகளை கொண்டிருக்கவில்லை. அத்தோடு சில சமுதாய மக்களின் கலாசாரத்திற்குப் பொருந்தாத வகையிலும் அமையப்பெற்றிருந்தன. மேலும் சில திட்டங்கள் சமுதாயம் அமைந்திருக்கும்

சூழல், காலநிலை அம்சங்களோடு தொடர்பற்ற வகையிலும், பொருந்தாத வகையிலும், அமைந்திருந்தன. தனிமனித சமுகத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத கட்டுமானத் திட்டங்கள் அனைத்துமே அவை அமுல்படுத்தப்பட்ட சமுதாய மக்களின் கருத்துக்களையோ, ஆலோசனைகளையோ கவனத்திற் கொள்வில்லை என்பது தெரிய வந்துள்ளது. தேவைகள் அதுவும் கட்டுமானரீதியான குடும்பத் தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலையில் சமூக நிறுவனங்களின் ஏனைய செயற்பாடுகளும் வினைத்திறன் அற்ற நிலையிலேயே அமையும். இதனால் சமுக ஒழுங்கு என்பது அங்கு சீர்குலைவுற்றதாகவோ அல்லது மீளமைக்கப் படாததகவோ காணப்படும். மீளமைப்புச் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்ட பல சமுதாயங்களில் சமுக ஒழுங்கு முறையாக மீளமைக்கப்படாமைக்கு முக்கிய காரணம் அச்செயற்றிட்டங்கள் மக்களின் தேவைகளுடன் பொருதிப் போகாமையாகும்.

### iv) சுரண்டப்படுகின்ற அல்லது அன்னியப்படுத்தப்பட்டதான உணர்வு

மீளமைப்பு நடைமுறைகளில் மீள்கட்டுமானம் என்பது சமுதாயத்தின் பௌதீக அடிப்டைகளை சார்ந்தது. இது பௌதீக வளப் பயன்படுத்தல், மனதவலுப் பிரயோகம் என்பவற்றை உள்ளடக்கியது. எனினும் இது சமுதாயத்தின் பொருளாதார செயன்முறைகளோடும் இணையப்பெற்றதாகும். மீள்கட்டுமான செயன்முறையில் கட்டுமானத்திற்கு அவசியமான பொருட்கொள்வனவு, இயற்கை, மனித வள பயன்பாடு என்பன ஒரு சமுதாயத்தின் பொருளாதார அம்சங்களுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளன. ஒரு சமுதாயத்தில் வீடமைப்புத் திட்டமோ அல்லது பாதை புனரமைப்புத் திட்டமோ செயற்படுத்தப்படும் போது இதற்கான பொருட்கள் அப்பகுதியில் கொள்வனவு செய்யப்படுவதும், அவ்வேலைகளுக்கான ஆட்கள் அப்பகுதிகளில் இருந்து பெறப்படுவதும் குறிப்பிட்ட சமுதாயத்தின் பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிக்கும் என்பது சமுதாய மக்களின் எதிர்பார்ப்பாகும். எனினும் பல மீள்கட்டுமான செயற்றிட்டங்களுக்கான பொருட்கள், வேலையாட்கள் வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் அத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட சமுதாயத்தல் உள்ள கட்டுமானத் தொழிலாளர்களும் கட்டுமானப் பொருள் விற்பனையாளர்களும் தமது சமுதாய செயற்றிட்டம் ஒன்றில் இருந்து தாம் பொருளாதார வழியில் பயன் பெறமுடியாது போன உணர்வினை கொண்டிருந்தனர். இதனால் சில சந்தர்ப்பங்களில் அத்திட்டங்களுக்கு அவசியமான சமுதாய ஒத்துழைப்பை அவர்கள் வழங்க மறுத்ததோடு, அவற்றை நடைமுறைப்படுத்துவதில் இடர்பாடுகளையும் தோற்று வித்திருந்தனர்.

இன்னும் சில மீள்கட்டுமானத் திட்டங்கள் சமுதாயத்தின் பொது வளங்களை பயன்படுத்துவதோடு தொடர்புபட்டிருந்தன. இதில் முக்கியமானது நீர்வினியோகத் திட்டங்களாகும். குறிப்பிட்ட சமுதாயமானது

சார்ந்திருக்கின்ற ஆள்புல எல்லைக்குட்பட்ட நீர்வளங்களைப் பயன்படுத்தி வேறு சமுதாயங்களுக்கு நீர்விநியோகிக்கும் கட்டுமானங்கள் வடக்கிலும் கிழக்கிலும் நிர்மானிக்கப்பட்டன.

குறிப்பாக கிழக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட நீர்விநியோகத் திட்டமானது பாரியளவில் நகர்புறத்திற்கும், நகரை அண்டிய பல கிராமங்களுக்கும் குடிநீர் விநியோகிப்பதை நோக்கமாகக் கொண்டது. ஆனால் அதற்கான நீர்வளம் பெறப்பட்ட பிரதேசத்திற்கு எந்தவித பயனையும் அத்திட்டம் அளித்திருக்கவில்லை. இதனால் அப்பிரதேசத்து மக்கள் தமது நீர்வளத்தின் மூலம் தமக்குப் பயன்வேண்டி போராட்டங்களை நடத்தினர். இது ஒரு கட்டத்தில் மறைமுகமான பிரதேச முரண்பாட்டிற்கு ஏதுவாயிருந்தது.

v) **இன நல்லிணக்கத்தில் தாக்கம்**

பல்லின சமூகங்கள் வாழுகின்ற இடங்களில் அமுல்ப்படுத்தப்பட்ட
மீள்கட்டுமானத்திட்டங்கள் பல பெருமளவில் இனரீதியான முரண்பட்ட விருப்புக்களின் தாக்கத்தினை பெற்றிருந்தன. ஏனைய மீளமைப்புத்திட்டங்களான பொருளாதார மறுவாழ்வளித்தல், சமூக வலுவூட்டல் திட்டங்களையும் விட, மீள்கட்டுமான திட்டங்களை தமது சமுதாய ஆள்புல எல்லையினுள் அமுல்ப்படுத்துவதில் இனக்குழுக்கள் மத்தியில் போட்டித்தன்மை நிலவியது. இத்தகைய போட்டித்தன்மைக்காக இனக்குழுக்கள் அரசியல், நிருவாகரீதியில் அதிகார பின்புலங்களின் உதவிகளையும் பெற்றிருந்தன. அதேவேளை உள்ளூர் அரசியற் கட்சிசார்ந்தவர்களும் தமது செல்வாக்கினை அரசியல் நலன்கருதி இச்செயற்றிட்ட அமுலாக்கங்களில் செலுத்தியிருந்தனர். இது இரண்டு விதத்தில் செயற்றிட்ட அமுலாக்குநர்களுக்கு சவாலாக அமைந்தது. ஏற்கனவே முரண்பாட்டிற்குள்ளாகியிருக்கின்ற பல்லின சமூகங்கள் வாழும் இடங்களில் எந்த இடத்தில் மீள்கட்டுமானத்தை நிறுவுவது என்பது ஒன்று. மற்றையது ஏற்கனவே முரண்பாடில்லாதிருக்கின்ற பல்லின சமூகங்கள் மத்தியில் எவ்வாறு சிக்கல் நிலைகளை தோற்றுவிக்காத வகையில் நடைமுறைப்படுத்துவதென்பது. ஏற்கனவே ஆள்புல எல்லைகள், அடையாளத்துவ முரண்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ள இனக்குழுக்கள் வாழுகின்ற சமூகங்கள் மத்தியில் திட்டத்தை அமுல்செய்யும் பொழுது, அத்திட்டம் குறிப்பிட்ட இனக் குழுவொன்றின் ஆள்புல எல்லையினுள் அமையுமிடத்து, அது ஏற்கனவே இருக்கின்ற முரண்பாட்டினை மோசமடையச் செய்யும். அதேபோன்று அத்தகைய முரண்பாட்டோடு இதுவரை தொடர்புபடாத பல்லின சமூகங்கள் வாழும் இடத்தில் திட்டத்தை ஒரு இனக்குழு வாழுகின்ற இடத்தில் அமைத்தால் அது புதிய முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். பொதுவான நிலைப்பாட்டில் கருதுவதானால் இவ்விரு சவால்களும் வெற்றிகரமாக சமாளிக்கப்படவில்லை என்றே கருத முடியும். அனேகமான சந்தர்ப்பங்களில் பிராந்திய நிருவாக, அரசியல் தலைமைகளின் வழிகாட்டல்களின் படியே அவை நடைமுறைப்பட்டிருந்தன. இது பல இடங்களில் முரண்பாட்டுச் சூழ்நிலைகளில் குறிப்பிடத்தக்க எதிர்நிலையான பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. அதாவது ஏற்கனவே

இருந்த முரண்பாடுகளை தீவிரப்படுத்தியிருந்தது. அத்தோடு புதிய முரண்பாடுகளையும் தோற்றுவித்திருந்தது. குறிப்பாக வீடமைப்புத் திட்டங்களே இத்தகைய இழுபறி நிலையை இனக்குழுக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தன. கட்டுமானத்திற்கு முன்னரான காலத்தில் பல்லின சமூகங்கள் வாழ்ந்த இடங்களில் வீடமைப்புத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்பட்ட முரண்பாடுகள் ஒருவிதத்தில் சமரசம் செய்யப்பட்டிருந்தன. அதாவது முரண்பாட்டிற்கு எத்தனித்த இனத்தரப்பினர்க்கு குறிப்பிட்ட தொகை வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. எனினும் அவ்வீட்டுத்திட்டத்தின் ஏனைய கட்டுமான வசதிகளான நீர்வினியோகம், பொழுதுபோக்கு அமைவிடம் முதலானவை மற்றைய இனக்குழுவின் இடத்திலேயே ஒன்றுகுவிக்கப்பட்டிருந்தன. இவ்வசதிகள் இனக்குழுக்கள் மத்தியில் பரிமாற்றமோ அல்லது பகிர்ந்தளிப்போ செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் அது ஏற்கனவே நிலவிய முரண்பாட்டிற்கான தீர்வாகக்கூட அமைந்திருக்கமுடியும்.

### vi) சமுதாய ஒருமைப்பாட்டை அதிகரித்திருந்தமை

தனிநபர், குடும்ப நலன்சார்ந்த கட்டுமானத்திட்டங்களான வீடமைப்புத்திட்டங்களை தவிர, குறிப்பிட்ட சமுதாய பொதுத்தேவைப் பூர்த்தியை மையப்படுத்திய மீள்கட்டுமானத் திட்டங்கள் பெருமளவில் சமுதாயங்களிற்கிடையேயான, சமுதாயத்திற்குள்ளேயான ஒருமைப்பாட்டை அதிகரித்துள்ளதாக மக்கள் அபிப்பிராயம் கொண்டுள்ளனர். இதற்கு திட்ட அமுலாக்குநர்களின் மூலோபாய நடவடிக்கைகளும் காரணம். அதாவது சமுதாய மக்களுக்கு அவசியமெனக் கருதப்பட்ட இடத்தில் பொதுத் தேவை குறித்த கட்டுமானங்கள் மக்களது பங்களிப்புடனேயே அமைக்கப்பட்டு, பின்னர் அது மக்களிடமேயே பராமரிப்பிற்காக கையளிக்கப்பட்டன. இது சமுதாயக் குழுக்களிடையே பொதுவுடைமை பேணலின் அடிப்படையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தியிருந்தது. சில சந்தர்ப்பங்களில் பொது வளங்களைப் பகிர்வது தொடர்பிலான பொதுத் தேவைசார் கட்டுமானங்களை தொடர்ந்து பேணுவதற்காக பயனாளிகள் மத்தியில் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. குறிப்பாக நீர்விநியோக கட்டுமானங்களான கால்வாய்கள், நீர்த் தாங்கிகள் அல்லது விவசாய பாதை, அதுசார்ந்த ஏனைய கட்டுமானங்கள் என்பவற்றின் பராமரிப்புப் பொறுப்புக்கள் சுய உதவிக்குழுக்களின் கைகளில் வழங்கப்பட்டன. இதனால் சமுதாயக் குழுக்கள் ஒன்றில் ஒன்று தங்கி வாழும் தன்மை அதிகரித்தது. இது ஒருமைப்பாட்டிற்கான பொதுவான சமூகவியல் அடிப்படையாகும். எனினும் சில பொதுத் தேவைசார் கட்டுமானங்கள் மக்களது ஆலோசனையை கருத்தில் கொள்ளாமலும் யதார்த்தமான சமுதாயத் தேவைகளை மதிப்பிடாமலும் அமைக்கப்பட்டமையால் எந்தவித பயன்பாடுமின்றி இன்றுவரை காணப்படுகின்றன. இத்தகைய கட்டுமானங்கள்

சமுதாயங்களில் எந்தவித தாக்கத்தினையும் ஏற்படுத்தவில்லை என்பதே உண்மையாகும்.

### 5. முரண்பாட்டிற்கு பின் சிவில் சமூகங்களின் நிலைமைகள் தொடர்பான உள்நோக்குகள்

முரண்பாட்டிற்கு பின்னரான மீள்கட்டுமான செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட இரண்டு மாகாணங்களினதும் சிவில் சமூகங்கள் இனம், மதம், வர்க்கம், சாதி, பால்நிலை போன்ற சமுதாயப் பிரிவினைகளின் வழியே பிளவுற்றுக்காணப்பட்டன. அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பெண்கள் ஒரங்கட்டப்படுகின்றமையானது பொதுவான தோற்றப்பாடாக அமைவதுவும் அதற்கேற்ப அபிவிருத்தி நுட்பங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டியதன் அவசியமும் மேலைத்தேய நாடுகளில் கூட கண்டறியப்பட்ட விடயங்களாகும். எனினும் சமுதாயப் பிளவுகளின் அடிப்படையில் கட்டமைப்புசார் வன்முறைகளிற்குட்பட்டுக் காணப்படுகின்ற மக்கள் குழுமங்கள் மீளமைப்பிற்கு அவசியமான மையப்படுத்தப்பட்ட விருப்புக்களை உருவாக்குவதில்லை. இதனால் இவ்விரு சமுதாயங்களிலும் அனைத்து மக்கள் பிரிவுகளினதும் சமத்துவமான பங்களிப்பைப் பெறுவதென்பது திட்ட அமுலாக்குனர்களுக்கு இயலாதவொன்றாக அமைந்திருந்தது. சில செயன்முறைகளில் ஒருமித்த விருப்பினை மக்கள் அனைவரும் கொண்டிருப்பதாகத் தோன்றினாலும் அது உண்மையில் இன, வர்க்க, சாதி அடுக்கமைவில் உயர்வுடையவர்களினதாகவே அமைந்திருந்தது. இதனால் செயற்றிட்டத்தை மேற்கொள்ளும் போது உறுப்பினர்கள் மத்தியிலான முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்ததோடு, ஏற்கனவே இருந்த பிரச்சினைகளும் அதிகரித்தன.

இச்செயற்றிட்டங்கள் பலவற்றின் ஆரம்பத்தில் தேவை மதிப்பீட்டுச் செயன்முறை, பங்குகொள் கிராம எழுச்சி முறை (PRA) என்பவற்றை மேற்கொண்டவேளைகளில் சமுதாய அடிப்படைக் குழுக்களின் தலைவர்கள் தமது சமுதாயத்தில் ஏலவே நிலவிய உறுப்பினர்களுக்கிடையிலான முரண்பாடுகள் குறித்து செயற்றிட்ட தலைவர்களுக்கு தெரியப்படுத்தவில்லை. தமது சமுதாயம் நல்லிணக்கத்துடன் இருப்பதாக தெரியப்படுத்துவதானது செயற்றிட்டத்தின் பயனைபெறுவதற்கு அடிப்படையென அவர்கள் எண்ணியிருந்தனர். அவ்வாறில்லாவிடின் திட்டம் தமது கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என எண்ணினர். அதேவேளை தமது குடும்ப உறுப்பினர்களை செயற்றிட்டத்தின் பயனாளிகளாக்குவதற்காக போலியான தரவுகளை வழங்கியிருந்தமையானது, ஏனைய சிவில் சமூக உறுப்பினர்கள் செயற்றிட்ட தலைவர்களுடன் முரண்படக்காரணமாக அமைந்தது. சிவில் சமூக உறுப்பினர்கள் மத்தியிலான சச்சரவுகள் ஏற்பட, சமுதாய அடிப்படைக் குழுக்களின் தலைவர்கள் தமது தவறுகளை மறைப்பதற்காக செயற்றிட்ட தலைவர்கள் மீது பழிசுமத்தியிருந்தனர். இதனால் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. மேலும் சமுதாய அடிப்படைக் குழுக்களின் அரசியற் கட்சிகளுடனான தொடர்புகளும் இவ்விணைப்புக்களுடனான கருத்தியல்

செல்வாக்கினாலும் இப்பிரதேசங்களில் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மேலதிக வேலைப்பழுவினை செயற்றிட்ட தலைவர்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. இதன் காரணமாக சிவில் சமூகங்களில் எதிர்பார்க்கப்பட்ட ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு என்பவற்றை செயற்றிட்ட தலைவர்கள் பெறுவதில் இடர்பாடுகள் அதிகரித்தன. இத்தன்மைகள் பங்குகொள் அபிவிருத்திக்கு அடிப்படையான சிவில் சமூகத்தின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதிலும் செயற்றிட்ட தரப்பினருடனான சிவில் சமூகத்தின் கூட்டினை (Partnership) உருவாக்குவதிலும் சவால்களை ஏற்படுத்தின.

## 6. முடிவுரை

பங்குகொள் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட மீளமைப்புத்திட்டமொன்றிற்கு அவசியமான சிவில் சமூகத்தின் பங்களிப்பை பெறுவதில் உள்ள சிக்கல்கள் சமுதாய ஒழுங்கமைப்பின் வழியே தீர்க்கப்பட முடியும். அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பல திட்டங்கள் அதன் அமுலாக்கங்களில் சமுதாய ஒழுங்கமைப்பின் அவசியத்தை நடைமுறையில் இனங்கண்டும் செயற்படுத்தியும் வந்துள்ளன. இருப்பினும் அதனை எவ்வகையில் ஏற்படுத்துவது, அதற்காக எந்த வகையான மாதிரியை கையாள்வது என்பதே முதன்மையான விடயமாகும். ரூத்மன் குறிப்பிட்ட சமுதாய ஒழுங்கமைப்பின் மூன்று மாதிரிகளில் சமூக செயல் அணுகுமுறையானது இத்தகைய மரபுரீதியான சமூகப் பிளவுகளும், கட்டமைப்புசார் வன்முறைகளும் நிறைந்த சமுதாயத்திற்கு பொருத்தப்பாடுடையதாகும். ஏனெனில் இவ்வணுகுமுறையானது சமுதாயத்தின் ஓரங்கட்டப்பட்ட மக்கட்பிரிவின் ஒழுங்கமைப்பின் தேவையை முதன்மைப்படுத்தியதாக அமைகின்றது. (Routhman, 1972: 21-22). மேலும் சமுதாய ஒழுங்கமைப்பு தொடர்பில் மரபுரீதியான கருத்தியலைவிடுத்து ஒரு நவீன அணுகுமுறையொன்றை பின்பற்றவேண்டியதன் அவசியமும் உணரப்பட்டுள்ளது. அதாவது தேவைக்கான வளங்களை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் மக்களை போராடுவதற்காக ஒன்றிணைக்கின்ற மரபுசார் சமுதாய ஒழுங்கமைப்பு அணுகுமுறையை பின்பற்றுவதானது சமுதாயத்தின் குழு அடையாளத்ததை உண்டுபண்ணத்தக்க சமூகப் பிரிவுகளின் வழியே மக்கள் ஒழுங்கமைய வழிவகை செய்யும். இது மீளமைப்புசார் அபிவிருத்திக்கு எதிரான சூழ்நிலையை தோற்றுவிக்கும். இதைவிடுத்து அபிவிருத்தி இலக்குகளை நோக்கி ஒரு குழுவாக செயற்படுவதற்கு மக்களை ஊக்குவிப்பதானது பங்குகொள் அபிவிருத்திக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும். இவ்வகை ஒழுங்கமைப்பை ஏற்படுத்துவதற்காக சிவில் சமூகத்தை பலப்படுத்தும் கைங்கரியங்களை மேற்கொள்வது அவசியமானது. இதன்நிமித்தம் சிவில் சமூகத்தின் கொள்ளளவை கட்டியெழுப்பும் (Capacity Building) செயற்றிட்டங்களை மேற்கொள்வது இன்றியமையாததாகின்றது. இவ்வாறு மேற்கொள்வதானது சிவில் சமூக உறுப்பினர்கள் முரண்பாடு தொடர்பில் ஒரு வன்முறையற்ற கலாசாரத்தை உருவாக்கிக் கொள்வதற்கான முன்நிலைமையை

ஏற்படுத்தும். (Bauer, Bigdon, & Korf,: 2003: 188). இத்தகைய ஜனநாயகப் பண்புமிக்க சிவில் சமூகமானது மீளகட்டுமானம் சார்ந்த பங்குகொள் அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட செயற்றிட்டங்களின் வெற்றிக்கு இன்றியமையாதனவாகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. Bauer, Eberhard, Bigdon, Christine, and Korf, Benedikt, 2003, Development Projects in Complex Emergencies: The Case of Trincomalee, Sri Lanka, In Markus Mayer, Darini Rajasingham-Senanayake, and Yuvi Thangarajah (Eds), Building Local Capacities for Peace: Rethinking Conflict and Development in Sri Lanka, New Delhi: Macmillan.
2. Bough, Chris van der, 2006, Donors in War-Torn Societies: A case Study of El Salvador, In Post Conflict Development: Meeting New Challenges, Gern Junne and Willemijn Verkoren (Eds), New Delhi: Viva Books Private Limited.
3. Cohen, Percy S., 1979(1968), Modern Social Theory, London: Heinemann Educational Books Ltd.
4. Constatino-David, Karina, 1997, Intra-Civil Society relations: An Overview, In Miriam Corenel Ferrer (Ed), Philippine Democracy Agenda, Vol.3 of Civil Society Making Civil Society, Quezon City: Third World Studies Centre.
5. Jeong, Ho-won, 2006, Peace Building in Post-Conflict Societies: Strategy and Process, New Delhi: Viva Books Private Limited.
6. Leahy, Margaret E., 1986, Development Strategies and the Status of Women, Colorado: Lynne Rienner Publishers.
7. Marshall, Gordon, 1998, Oxford Dictionary of Sociology, New York: oxford University Press.
8. Nanda, Serena, 1980, Cultural Anthropology, New York: D. Van Nostrand Company.
9. Orjuela, Camilla, 2004, Civil Society in Civil War: Peace Work and Identity Politics in Sri Lanka, Ph.D. Dissertation, Department of Peace and Development Research, Goteborg University, Goteborg, Sweden.
10. Outhwhite, William and Bottomore, Tom, 1996, Blackwell Dictionary of Twentieth Century Social Thought, London: Blackwell Publishers.
11. Rothman, Jack, 1972(1970), Three Models of Community Organization Practice, In Fred M. Cox, John L. Erlich, Jack Rothman and John E. Tropman (Eds), Strategies of Community Organization, Illinois: F.E. Peacock Publishers
12. Wickramasinghe, Nira, 2001, Civil Society in Sri Lanka: New Circles of Power, New Delhi: Sage publication.